1968 ஆகஸ்ட் 26]

(b) whether there is a lecturer for conducting the above course ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஊன் விற்பவர்களுக்கான தோல் உரிப்பது குறித்த பாடமுறை 1966-67-ல் சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்படவில்லை. 1967-68-ம் ஆண்டுககான பாடமுறை 31—10—1967 முதற்கொண்டு தொடங்கப்பட்டது.

(இ) ஆம்.

கோவை விவசாயக் கல்லூரி.

*148 வின.—**திரு. செ. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1967-68-ல் கோவை அரசினர் விவசாயக் கல்லூரியில் பதவி ஓய்வு பெறும் காலத்திற்கப்புறமும் பதவி நீடிப்பு செய்யப்பட்ட பேராசிரியர்கள் யார் யார் ?

(இ) இப்பதவி நீடிப்புகளுக்கான தனித்தனிக் காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) எவருமில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Madras Panchayats Act

*153 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(a) whether there is any proposal to amend the Madras Panchayats Act, 1958 ; and

(b) if so, when ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) இயன்ற அளவுக்கு விரைவில் திருத்தப்படும்.

திரு. ஏ. எம். ராஜா : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றிய தலைவரையும், ஊராட்சி மன்றத் தலைவரையும் நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையை இந்தச் சட்டததிருத்தத்தில் கொண்டுவர முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : சட்டத்தைத் திருத்த முயற்சி மேற்கொள்ளும் பொழுது கனம் அங்கத்தினர் அவர்களுடைய கருத்தும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவரவர்களே, பொது மக்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையில்லாத காரணத்தால ஆள் தூக்குகின்ற நிலைமையும் ஒருவரையொருவர் கொலை செய்யும் சூழலும் இருப்பதை அரசு அறியுமா? எனவே, அதற்குப் பரிகாரம் தேடும் முறையில் பொது மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுப்பதற்கான சூழலை ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஏற்கனவே உறுப்பினர் கேட்ட கேள்விக்கு இதற்கான விளக்கம் தரப்பட்டிருக்கிறது.